# 1996 ஆம் ஆண்டு
# தேசிய எதிர் சக்தியளித்தல்
# தினங்கள்

**07-09-96**

**12-10-96**

இந்நாட்களில்

5 வயதிற்குட்பட்ட

சகல குழந்தைகளுக்கும்

போலியோ தடைமருந்து

கொடுக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய எதிர் சக்தியளித்தல் தினம்

குழந்தைகளைப் பெரிதும் பாதிக்கும் ஒரு நோய், போலியோ. இதை இளம்பிள்ளை வாத நோய் என்றும் அழைப்பதுண்டு. கடந்த பல தசாப்தங்களில், எமது பல குழந்தைகள் இறப்பதற்கும், நூற்றுக் கணக்கில் அங்கவீனர்கள் ஆவதற்கும் காரணமாய் இந்நோய் இருந்துள்ளது.

இந்நோய் வராது தடுக்கக் கூடிய இரண்டு வகையான தடை மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒன்று ஊசி மூலம் ஏற்றப்படுவது, மற்றது சொட்டுகளாக வாய்மூலம் கொடுக்கப்படுவது.

இலங்கையில், 1978 ஆம் ஆண்டு ஆரம்பித்த, விரிவாக்கப்பட்ட தடை மருந்து கொடுக்கும் திட்டத்தின் கீழ், போலியோவிற்கு எதிரான வாய் மூலம் கொடுக்கும் சொட்டு மருந்து, சகல சிசுக்களுக்கும் கொடுக்க ஆரம்பிக்கப்பட்டு, இன்று வரை தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போது இம் மருந்து, குழந்தையின் 3 ஆம், 5 ஆம், 7 ஆம், 18 ஆம் மாதங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது.

இப்படித் தொடர்ந்து இம் மருந்து கொடுக்கப்பட்டு வருவதால், போலியோவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை, தற்போது கணிசமான அளவு குறைந்துள்ளது,

முன்னர் 6 வருடங்களுக்கு ஒரு முறை ஏற்படும். அதிகரித்த நோயாளர் தொகையும், கடந்த சில வருடங்களாக தவிர்க்கப்பட்டுள்ளது.

இருந்தாலும் போலியோ நோய் குழந்தைகளை இடைக்கிடை பாதித்துள்ளது. இதன் விபரம், அட்டவணை 1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1 :- இலங்கையில் போலியோவினால் பாதிக்கப்பட்ட குழந்தையின் தொகை — 1955 முதல் 1993 வரை

| ஆண்டு | | தொகை |
|---|---|---|
| 1955 | — | 102 |
| 1960 | — | 219 |
| 1965 | — | 382 |
| 1970 | — | 121 |
| 1975 | — | 119 |
| 1980 | — | 264 |
| 1985 | — | 11 |
| 1990 | — | 9 |
| 1993 | — | 7 |

அம்மை நோயை உலகத்திலிருந்து முற்றாக அகற்ற வேண்டும் என்ற குறிக்கோளை முன்னெடுத்து, 1978ல் வெற்றிகண்ட உலக சுகாதார தாபனம், அதேபோன்று 2000 ஆண்டில் உலகத்திலிருந்து போலியோவையும் அகற்ற வேண்டும் என்ற குறிக்கோளை முன்னெடுத்துள்ளது.

இந்தக் குறிக்கோளை அடைவதற்கு, சர்வதேச ரீதியாக ஒவ்வொரு நாட்டிலும், தேசிய எதிர்சக்தியளித்தல் தினங்களை நிர்ணயித்து அந்தத் தினங்களில், 5 வயதிற்குறப்பட்ட சகல குழந்தைகளுக்கும், போலியோ தடை மருந்து கொடுக்கப்படல் வேண்டும் என்று தீர்மானித்துள்ளது. இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில், உலக சுகாதார தாபனத்துடன், சர்வதேச றோட்டரிக் கழகமும் இணைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இத்திட்டம் 1995ல் ஆரம்பிக்கப்பட்டது. சென்ற வருடம் யாழ்மாவட்டத்து மக்களில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்த நிலையிலும், நவம்பர் 4ம் திகதியும், டிசம்பர் 9ம் திகதியும், பெரும்பாலான குழந்தைகளுக்கு போலியோ தடை மருந்து கொடுக்கப்பட்டது.

உலக சுகாதார தாபனத்தின் திட்டத்தின் படி, தேசிய எதிர் சக்தியளித்தல் தினங்கள், தொடர்ந்து 3 வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இப்படி செய்தால்தான் நாட்டில் பரவியுள்ள போலியோ வைரசுவை முற்றாக அழிக்க முடியும். அமெரிக்க நாடுகளில் தேசிய எதிர்சக்தியளித்தல் தினங்களைத் தொடர்ந்து 3 முதல் 5 வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தியதால் அந்நாடுகளிலிருந்து போலியோ நோய் முற்றாக அகற்றப்பட்டு விட்டது.

இலங்கையில் 07.09 96ம் 12.10.96ம் தேசிய எதிர்சக்திய ளித்தல் தினங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நாட்களில்

1. 5வயதிற்குட்பட்ட (60 மாதங்கள் வரையிலான) சகல குழந்தைகளுக்கும், போலியோ தடை மருந்து இரண்டு முறை (07.09.96லும் 12.10.96லும்) கொடுக்கப்பட வேண்டும்.
2. விரிவாக்கப்பட்ட தடை மருந்து கொடுக்கும் திட்டத்தின் கீழ் சிகிச்சை நிலையங்களில் போலியோ தடை மருந்து மிக அண்மையில் கொடுக்கப்பட்டிருந்தாலும், இந்த நாட்களில் போலியோ தடை மருந்து மேலதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும். இதனால் குழந்தைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.
3. முன்னர் சிகிச்சை நிலையங்களில் போலியோ தடை மருந்து கொடுக்க முடியாமல் போனவர்கள் தவறாது இந்தத் தினங்களில் தங்கள் குழந்தைகளுக்கு இந்த மருந்தைக் கொடுக்க வேண்டும்.
4. போசாக்குக் குறைபாடு, இருமல், தடிமல் காய்ச்சல், வயிற்றோட்டம் முதலிய நோய்கள் இருப்பினும் போலியோ தடை மருந்து கொடுக்கலாம்.

போலியோ தடைமருந்து கொடுக்கப்படாத குழந்தைகளுக்கு, போலியோ ஏற்படக் கூடிய வாய்ப்பு கூடுதலாக உள்ளது என்பதை பெற்றோர் ஞாபகத்தில் வைத்திருத்தல் அவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட தினங்களில் ஒவ்வொரு குடும்பநல சேவையாளர் பிரிவிலும், மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு, 5 வயதிற்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும், போலியோ தடை மருந்து கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரையில் இந்த நிலையங்களைப் பற்றி அறியாது இருந்தால், உங்கள் பகுதி குடும்பநல சேவையாளரிடமோ, சுகாதார பரிசோதகரிடமோ அரசாங்க வைத்திய நிலையங்களிலோ கேட்டறிந்து உங்கள் 5 வயதிற்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும், போலியோ தடை மருந்தைக் கொடுங்கள்.

எங்கள் நாட்டிலிருக்கும் போலியோ வைரசுகளை, முற்றாக அழித்து, எமது குழந்தைகளையும், எதிர்கால சந்ததிகளையும் இக்கொடு நோயிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால் உங்கள் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் அவசியம் தேவை

— டாக்டர் ந. சிவராஜா

'' சுகமஞ்சரி '' 1996 மலர் 4 இன் இணைப்பாக வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— அரச பணி —

சேரல்:

.................................................................

.................................................................

.................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org